விலை ரூபா 1–25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 3 ரா ஆகிர் 1 இதழ் 309

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18 12 1986

இஸ்ரேலியர் இங்கே உள்ளனர் இதைக் கூற நான் வெட்கப்படவில்லை"

— அமைச்சர் காமினி

(கொழும்பு நிருபர்)

"இஸ்ரேலியர்கள் இங்கே உள்ளனர் இதை சொல்ல நான் வெட்கப்படவில்லை நான் இஸ்ரேல போக முடியாதா? என எதிர்கட்சியினர் கேட்டனர். அவர்களை இங்கு அழைத்து வர முடியும்போது நான் ஏன் இஸ்ரேல் போக வேண்டும்."

இவ்வாறு காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திஸநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கூட்டின் குழு நிலை விவாதத்தின்போது பதிலளித்து பேசிய அமைச்சர் மேலும் பேசுகையில், கடல் நீரையும் நன்னீராக மாற்றும் திறம் படைத்தவர்கள், பாலைவனத்தையும் சோலைவனமாக மாற்றும் வல்லமையுடையவர்கள் என்றார்.

மேலும் மகாவலி திட்டத்திற்காக எந்த நாடுகளிலிருந்தும் உதவியைப் பெறத் தயாராக இருப்பதாகக் கூறினார். (எ)

கொக்காவிலில் புலிகள் தாக்குதல்

8 இராணுவம் பலி, பலர் காயம்

(நமது நிருபர்)

வவனியாவிலிருந்து மாங்குளம் நோக்கி ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது, தமிழீழ விடுதலைப் புலிகள் 'கனன் சார்ஜ்' தாக்குதல் மேற்கொண்டதில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் கொக்காவிலுக்கு அண்மையில் உள்ள கிழவன்குளத்துக்கருகாமையில் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது

இச்சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நேற்றுமுன்தினம் காலை இனஒழிப்புக்காக 200 இராணுவத்தினரளவில் 30 வாகனங்களிலும், நடந்தும் வவனியாவிலிருந்து மாங்குளம் நோக்கி வந்துகொண்டிருந்தனர். மாங்குளத்துக்கும் கொக்காவிலுக்கும் இடையில் கிழவன்குளத்துக்கு அருகாமையில் வைத்து எமது விடுதலைப்புலிகள் நடந்து வந்த இராணுவத்தினர் மீது 'கனன் சார்ஜ்' தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது ஸ்தலத்திலேயே 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். இச்சம்பவத்தின் போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் ஏற்படவில்லை" (மா)

● கிழக்கில் உருவாகும்

தமிழ் மாகாண சபையுடன் திருமலை இணையவேண்டும்

இந்திய அமைச்சர் குழு வலியுறுத்தும்

கொழும்பு, புதன்.

இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் கிழக்கில் அமைக்கப்படவுள்ள தமிழ் மாகாணசபைக்கு மேலதிகமாக திருமலை மாவட்டத்திலிருந்து தமிழரை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதிகளை வழங்குமாறு தற்போது கொழும்பு வந்துள்ள இந்திய குழுவினர் ஜனாதிபதியிடம் கோருவர்எனத் தெரியவருகிறது.

இந்திய மத்திய இணையுறவுச் செயலர் திரு வெங்கடேஸ்வரன், அரசியல் யாப்பு நிபுணர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர் விசேட விமான மூலம் நேற்றுப் பிற்பகல் கொழும்புவந்துசேர்ந்தனர்.

இந்தியகுழுவினர் தம்முடன் புதிய யோசனைகளை கொண்டு வருவதாகக் கூறப்பட்டபோதிலும் அதுபற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை ஆயினும் இவர்கள் தமது பேச்சுக்களின்போது கிழக்கு மாகாணத்தில் கடந்த 10 வருட காலத்தில் ஏற்பட்டுள்ளபாரிய இனவிகிதாசார மாற்றங்கள் பற்றி இலங்கை அரசிடம் பிரஸ்தாபிப்பரெனத் தெரியவருகிறது. இம்மாகாணத்தில் 1921ம் ஆண்டில் 4சதவீதமாக இருந்த

(7-ம் பக்கம் பார்க்க)

"இனப்பிரச்னை தீர்வை நிதானமாக அணுகுதல் அவசியம்"

கொழும்பு, புதன்

இந்திய மத்திய வெளியுறவு இணையமைச்சர் திரு நடவர்சிங் நேற்று மாலை கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தார். திரு நட்வர்சிங்குடன் இந்தியத் தூதுவர் திரு.

(7ம் பக்கம் பார்க்க)

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany

★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் [BOND] விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

(A 3250)

பிந்திய செய்தி

கொழும்பு, புதன்

இந்திய குழுவினருக்கும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்க குழுவினருக்குமிடையே திட்டமிட்டபடி நேற்றிரவு 7 மணிக்கு முதற் கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

மேலதிக விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இன்று இரு கட்டப்பேச்சு

இந்திய குழுவினருக்கும் இலங்கை குழுவினருக்குமிடையே இன்று இரு கட்டப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன

இதேவேளை சிதம்பரம் குழுவினர் திருமதி பண்டாரநாயக்காவையும் சந்திக்கவுள்ளனர்.

1987 ஜனவரி முதல்: விடுதலைப் புலிகள் தனிநாடு பிரகடனம் - அரச தகவல்

கொழும்பு, புதன்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அடுத்த வருடம் ஜனவரி 1ம் திகதியன்று தனிநாடு பிரகடனப் படுத்தப்போவதாகவும், இதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டு வருவதாகவும் இலங்கை தரப்பில் இந்திய குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (7ம் பக்கம் பார்க்க)

குருநகரில் நேற்று நிலவிய பதற்றம்

(நமது நிருபர்)

யாழ் கோட்டை முகாமிலிருந்தும், மண்டைதீவு முகாமிலிருந்தும் இராணுவத்தினர் நேற்றிரவு வெளியிடத்தாகத் தகவல் பரவியதைத் தொடர்ந்து நகரில் பதற்றநிலை தோன்றியது.

யாழ கோட்டை இராணுவ முகாமிலிருந்து. கோட்டை குருநகர் வீதி 'சென்ரி'யில் ஒரு

(7ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் சக்திவாய்ந்த இரு குண்டுகள் கண்டுபிடிப்பு

[கொழும்பு]

கொழும்பிலுள்ள பல பிரதான அலுவலகங்களில் மின்விநியோகத்தைத் தடைப்படுத்தும் சதித்திட்டமொன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வலுவலகங்களுக்கு மின்விநியோகத்தை வழங்கும் உயர் மின்நிலையமொன்றில் இருகுண்டு

(7-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன் துறைமுகத்தில் ராணுவ பொருளுடன் கப்பல்

[மாவிட்டபுரம் நிருபர்]

இராணுவத்திற்கான பொருள்களுடன் நேற்று வந்த கப்பலொன்று காங்கேசன் துறை துறை முகத்தில் தரித்து நிற்கின்றது

இக்கப்பலில் பல பாரிய பெட்டிகள் இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி துறை முகத்தில் வழமையாக நடைபெற்று வரும் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் இக்கப்பலின் வருகையால் நேற்று நடைபெறவில்லை என அறியப்படுகிறது

இதேவேளை இக்கப்பல் வந்த நேரம் தொடக்கம் இப்பகுதியில் ஹெலிவகாப்டர் ஒன்றும் சீ-பிளேன் ஒன்றும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

கறுப்பின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. 51, விநாயகர்வீதி, சுண்டுக்குளி. (C 6419)

நல்ல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய இடம்: ஸ்ரார்எலக்ரோனிக்(மஸ்கன்ஸ் லிமிட்டெட் அருகாமையில், 37/6 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். (C 6425)

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள், ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடர்ஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், போன்: 24055 [A3307]

நத்தார் புதுவருட வாழ்த்துக்களும், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001 [C6299]

Nel Farm, Christombu Farm சேவற்குஞ்சுகள் முறையே 23ந் திகதி, 24ந் திகதி விநியோகிக்கப்படும். விலை 4/50 முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். C 6399

பெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயறிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு. மகிமிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (G 6365)

தேவை

தளபாடங்கள், பழைய குளி சாதனப்பெட்டிகளும், மற்றும் பொருட்களும் உடன் தேவை. பத்மநாதன், Pree, Multi Service, திருநெல்வேலி வடக்கு. (C 6417)

ஒப்பந்த அடிப்படையில் பல வேலைகளையும் செய்யும் தச்சு வேலை யந்திரம் ஆசாரியுடன் தேவை. 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். C 6388

வகுப்புகள்

A/L 87 ஒட்ட மின்னியல் ஆரம்பம் 20-12-86 Sat and Sun 2 00p m ஆசிரியர் ரவீந்திரநாதன் B sc (Sri-Lanka) 3rd Cross Street, Jaffna (P.M.C முன்பாக) (C 6415)

Radio T V, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், பிளம்பிங் தட்டெழுத்து- சுருக்கெழுத்து 20-12-1986ல் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது தொடர்பு: Vispa Engineering Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 6392

TOEFL Essay Writing பயிற்சி வகுப்புக்கள் இரு மணித்தியாலம் A/L, Exam Grammar ஆரம்பம் 20-12-86. சனி, ஞாயிறு மாலை 3-5 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (C 6378)

தவறிவிட்டது

V சிவசுப்பிரமணியம், பண் நிலையம், கீரிமலை என்ற விலாசமிடப்பட்ட கடித உறையினுள் வங்கி [பென்ஷன்] வவுச்சர் ஸ்ரான்லி வீதியில் [வெலிங்டன் சந்திக்கருகில்] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் Bond Institution, 58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் என்ற இடத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [C 6429]

க. அருணாசலம் ஆகிய எனது அடையாள அட்டை 10-12 86 அன்று பஸ் வண்டியில் பிரயாணம் செய்யும் பொழுது வவுனியாவுக்கும் புளியங்குளத்திற்கும் இடையில் தவறி விட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிவிடவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். க. அருணாசலம் ஆசிரியர், சித்தன்கேணி தபாற்கந்தோர். (C 6431)

மாலாணர் கதிரேசு செல்லத்துரை எனபவரின் E 139234 இலக்கம் கொண்ட கடவுச்சீட்டு இரண்டு மாதத்துக்கு முன்னர் ஏழாலை இழக்கு சந்திக்கும் புளியடி வைரவர் கோவிலுக்குமிடையில் தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் க செல்லத்துரை, கீரிமலை வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. (C 6430)

பண்டத்தரிப்பு பரிஷ்
ப. நோ கூ. சங்கம்.

16 இந்தியன் [PREMIER] மின்தறிகள் விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல்

மேற்படி சங்க மின்தறி ஆலையில் நல்ல நிலையிலுள்ள 16 இந்தியன் (Premier மின் தறிகளும், இவைகளுக்குத் தாராளமாக ஊடை நூல் விநியோகிக்கக்கூடிய ஊடை நூல் இயந்திரமும் (Purn Winder) விற்பனைசெய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இயந்திரங்களைப் பார்வையிட விரும்புவோர் சங்கக் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். கேள்விப்பத்திரமும் அதற்கான விதிமுறைகளும் சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். திருப்பிப் பெறப்படும் வைப்புப் பணமாக ரூபா 1000/-ம், திருப்பிப் பெறப்படாத வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்தி பற்றுச்சீட்டுக் காண்பித்தவர்களுக்கு மட்டும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் பெற வேண்டிய கடைசித் திகதி 24-12-1986. கேள்விப்பத்திரங்கள் யாவும் 'பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ கூ. சங்கம், பண்டத்தரிப்பு' என விலாசமிடப்பட்டு, கடித உறையின் இடபக்க மேல்மூலையில் ''மின்தறிகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிட்டு, இலச்சினை பொறிக்கப்பட்டு பதிவுத் தபாலில் 31-12-1986ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும அல்லது இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியினுள் போடப்படல்வேண்டும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு
[A 3338]

சேவை

டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள் மற்றும் ஏனையோரும் திருமணம் நிச்சயிக்க உடன் தொடர்பு கொள்ளவும்: பிரபல ரேகை எண் சோதிட நிபுணர் செ நாகேந்திரராசா. 174/16 கோவில் வீதி. [கைலாச பிள்ளையார் கோவிலடி.] நல்லூர். [C 6305]

1-ம் ஆண்டு நினைவஞ்லி

திருமதி
கனகம்மா
பத்மநாதன்

மலர்வு:- 17- 08- 1933
உதிர்வு:- 29- 12- 1985
திதி:- 18- 12- 1986

கால நீரோட்டம் கருகி மறைந்தாலும் எம் இதயத்தில் ஏற்றிவைத்த அன்பெனும் சுடர் என்றும் ஒளி வீசியவாறிருக்கும். நீங்கள் மறைந்து ஒருவருடம் ஆனாலும் எங்கள் இதயம் ஓயும்வரை எங்கள் அன்பு அம்மாவின் திருவுருவம் எம்மை விட்டு மறையாது: உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கள் கண்ணீர் மலர்களை உதிர்த்துக் காணிக்கை ஆக்குகிறோம்.

அன்புக் கணவன்;
பத்மநாதன்,
பிள்ளைகள்: றஞ்சி,
தர்மதாஸ் (கனடா).
சாந்தி வசந்தகுமார்
(பிரான்ஸ்), உற்றூர்,
உறவினர், நண்பர்கள்.
''பத்மபதி'',
சங்கானை, (C 6410)

சிறுவர் பாடல் தொகுப்பு

உரும்பிராய், புதன் சிறுவர் பாடல்களைத் தொகுத்து தனி நூலாக வெளியிடும் பணியில் யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுப்பிரமணியம் ஈடுபட்டுள்ளார். கிழக்கிலங்கையின் சிறுவர் பாடல்களை ஏற்கவே அவர் சேகரித்துள்ளார்.

தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா, மன்னாடு, மன்னார் ஆகிய பிரதேசங்களிலுள்ள சிறுவர் நாட்டார் பாடல்களைச் சேகரிக்கும் பணியில் இவர் ஈடுபட்டிருக்கிறார்.

இப் பகுதியில் சிறுவர் நாட்டார் பாடல்களைச் சேகரித்து வைத்திருக்கும் அலுவலர்கள் பொதுமக்கள் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி இ பாலசுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (வா)

அந்தியேட்டி அழைப்பும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்

அன்னையின் மடியில்:-
31- 12- 1920
ஆண்டவன் அடியில்:-
19- 11- 1986

அமரர்
விசுவலிங்கம்
செல்லத்துரை
அல்லைப்பிட்டி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகள் எமது இல்லத்தில் மார்கழித் திங்கள் 4-ம் நாள் [19- 12- 86] வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்;
அல்லைப்பிட்டி- 3
(C 6422)

பஸ்சேவை

மன்னார், புதன் நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் மன்னார்-கொழும்பிற்கான பஸ் சேவை ஆரம்பமாகியுள்ளது காலை 7-30 மணிக்குதினமும் மன்னாரிலிருந்து புறப்படும் பஸ் வண்டி அன்று மாலை 5 மணிக்குக் கொழும்பை அடைகின்றது.

பரீட்சை எடுக்க ஒழுங்கு

யாழ்ப்பாணம், புதன் க. பொ. த. சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையின் போது இடம்பெற்ற அசம்பாவிதமொன்றில் காயத்துக்குள்ளான காரைநகர் இந்துக் கல்லூரி மாணவனுக்கு அடுத்த வருடம் இலவசமாக கணிதப் பரீட்சை எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருப்பதாக கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (வா)

நியமனம்

கண்டுக்குளி, புதன் யாழ் செயலக பரிபாலன கிளையில் பிரதம லிகிதராக பணிபுரியும் திரு. செ. தர்மலிங்கம் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். இவர் கடந்த வாரம் யாழ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு எஸ் ஜெகசோதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (வா)

இடமாற்ற அறிவித்தல்

13, 14 பெரிய கடையில் இயங்கிய ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ. ஸ்தாபனம் 79, கே. கே. எஸ். வீதி M O சன்ஸ் கூடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்;

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.
[C 6428]

முதலாம்வருட நினைவஞ்சலி

அமரர் நடராசா
மாணிக்கநடராசா

தோற்றம்:- 15-11-1924
மறைவு:- 16-12 1985
திதி:- 04- 01- 1987

எங்கள் குடும்பத்தலைவனாய் எம்மை ஆதரித்து பாசத்துடன் வழி நடத்திய எம் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம். அன்னாரின் 1ம் ஆண்டு திவசக்கிரியைகள் 04- 01- 87 ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொவளுமாறு வேண்டுகின்றோம

மனைவி மக்கள்.
மருமக்கள்,
81, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில். [C6426]

ST. PATRICK'S COLLEGE JAFFNA

NEW ADMISSIONS TO YR. 6 1987

பிரவேச விண்ணப்பம்-6ம் வருடம்
(GRADE 5th) 1987

1-2-1976க்கு பின் பிறந்த மாணவர் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பப் பத்திரம் ரூபா 20/. (பரீட்சைக் கட்டணம் உட்பட) கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில்வந்து கேட்பவர்களுக்கு கொடுக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கவேண்டிய கடைசித் தினம் 30-12-86. பிரவேசப் பரீட்சைத் தினம் 3-1-1987 காலை 8-30 மணிக்கு.

கல்லூரி அதிபர்
(A 3257)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக் - கராச்சி கலவரங்கள்:

இறந்தோர் எண்ணிக்கை 176 ஆக அதிகரிப்பு!

கராச்சி, டிச 17.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இடம் பெற்றுவரும் இனக்கலவரங்களில் இறந்தோரின் எண்ணிக்கை 176 ஆக உயர்ந்துள்ளது. நேற்று இடம் பெற்ற கலவரத்தில் 22 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 13 பேரின் சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்திருந்தன.

மொஹஜிர், பட்டாண் என்ற இரு சமூகத்தவரிடையே கராச்சியிலும் அதன் சுற்றாடலிலும் கலவரங்கள் வெடித்துள்ளன.

வீடுகள், தொழிலகங்கள் வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் என்பன தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

கலவரம் பாதித்துள்ள இடங்களில் பொலிஸாருடன் பாகிஸ்தானின் முப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் கலகக்காரர்கள் பயங்கர ஆயுதங்களுடன் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊரடங்குச்சட்டங்களும் பல இடங்களில் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாக் பிரதமர் ஜூனைஜோ அதிபர் ஷியாவுல் ஹக் ஆகியோர் கலவரம் பாதித்த இடங்களைப் பார்வையிட்டதுடன், வைத்தியசாலையொன்றில் காயமடைந்தவர்களையும் பார்வையிட்டனர்.

ஈரான் ஆயுத விவகாரம்:

வெள்ளைமாளிகை நிர்வாக அதிகாரி சாட்சியம்!

வாஷிங்டன், டிச. 17.

ஈரானுக்கான இரகசிய ஆயுத விநியோகம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் அமெரிக்க காங்கிரஸ் விசாரணைக்குழு முன்பாக வெள்ளை மாளிகையின் நிர்வாக அதிகாரியான டொனால்ட் றீகன் நேற்று சாட்சியமளித்தார்.

திரு டொனால்ட் றீகன் சுமார் 5 மணி நேரம், தமது சாட்சியத்தை வழங்கினார். அவர் தமது சாட்சியத்தில், ஈரானுக்கான இரகசிய ஆயுத விநியோகம் குறித்து தாம் அறிந்திருந்ததாகவும், ஆனால் அதன் மூலம் கிடைத்த பணம் நிக்கரகுவாவிற்கு அனுப்பப்பட்டது குறித்து தமக்கு எதுவும் தெரியாதெனக் கூறினார்.

இப்பணவிநியோகம் குறித்து ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகனுக்கும் எதுவும் தெரிந்திருக்க முடியாதென்றே தாம் கருதுவதாக டொனால்ட் றீகன் தெரிவித்தார்.

இதேவேளை இந்த இரகசிய ஆயுத விவகாரம் அம்பலத்துக்கு வந்ததையடுத்து அதிபர் றீகனின் தேசிய பாதுகாப்பு ஆலோசனைசபையைச் சேர்ந்த வேறொரு சிரேஷ்ட அதிகாரியும் நேற்று இராஜினாமா செய்தார்.

வார்ட்டர்கேட் ஊழலை விசாரித்த——

டானியல் இன்யூன், ஈரான் விவகாரத்தையும் விசாரிப்பார்

வாஷிங்டன் டிச. 17.

ஈரானுக்கு இரகசிய ஆயுத விநியோகம் தொடர்பாக 'வார்ட்டர் கேட்' விசாரணைப் பாணியில் ஜனாதிபதி றீகனும் அவரது சகாக்களும் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

1975ம் ஆண்டு முன்னாள் அமெரிக்க அதிபர் ரிச்சார்ட் நிக்ஸனின் 'வார்ட்டர் கேட்' ஊழலை விசாரணை செய்த டானியல் இன்யூன் என்பவரே இந்த இரகசிய ஆயுத விநியோகம் குறித்தும் விசாரணை செய்யவுள்ளார்.

திரு. டானியல் இன்யூன் ஹவாய்த்தீவைச் சேர்ந்த முன்னாள் செனட்டராவார்.

ஜனவரிமாத இறுதிப்பகுதியில் ஈரான் இரகசிய ஆயுத விநியோக விசாரணை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை அமெரிக்க காங்கிரஸ் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்க மறுத்த முன்னாள் தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர்களான அட்மிரல் பொயின்ட் டெக்ஸ்டர், கேர்ணல் ஒலிவர் நோத் ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாமென திரு றீகன் அமெரிக்க காங்கிரஸைக் கேட்டுள்ளார்

இவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கும்பட்சத்தில் இவர்களால் ஏனைய விசாரணைகளின் போது தோற்றமுடியாமல் பாய்விடும் என்று திரு றீகன் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அவரின் இந்த வேண்டுகோளை அமெரிக்க காங்கிரஸ் விசாரணைக்குழு நிராகரித்துள்ளது.

ஓய்வூதியம் பெறும் இவர்களுக்கு உதவி

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் இப்பகுதிகளில் உள்ள வயோதிய ஓய்வூதியம் பெறுவோர்களுக்கான உதவிகளை வழங்கி அவர்களைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கான திட்டமொன்றினை அடுத்த வருடம் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதுசம்பந்தமான நடவடிக்கைகளை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தலைவர் திரு சி. பாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்

இதுசம்பந்தமாக திரு. பாலசிங்கம் வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமசுவாமிகளான சுவாமி பரமானந்தஜீயுடன் தர்மகர்த்தாசபை நிர்வாக அங்கத்தவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். இந்த ஆச்சிரமத்தில் உள்ள அனாதைச்சிறுவர்களுக்கு ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் அனுசரணையுடன் முதலுதவிப் பயிற்சி, தாதிமாருக்கான பயிற்சி போன்றன மேற்கொள்ளப்படவுள்ளன மேலும் ஓய்வூதியம் பெறுவோரின் உதவியுடன் வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்தில் தங்கும் அறைகள், மருந்தகம், நோயாளர் படுக்கை மண்டபம் என்பனவற்றையும் அமைத்து அடுத்த வருடம் இத்திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாக அறிவித்துள்ளனர். இத்திட்டம் ஓய்வூதியம் பெற்றுக் குறைந்த பராமரிப்புள்ளவர்களுக்கு மிகப் பயனுடையதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய பலன்

மாதம்: மார்கழி
திகதி: 3 18-12-86]
கிழமை: வியாழன்
திதி: துதியை
நட்சத்திரம்: புனர்பூசம்

மேடம்: பொருள் வரவு முண்டு. பொன்னான வாழ்வு முண்டு. நீர்த்தொழில் விருத்தியுண்டு.

இடபம்: திரை மறைவில் சதித்திட்டம் உருவாகும். கடற்றொழிலாளர்கள் அதிக கவனம் செலுத்தவும். சிலர் வாழ்க்கையும் பாதிக்கப்படலாம்.

மிதுனம்: அவசரக் கோலம் தலைகாட்டும். பொருள் தவறக்கூடும். எதிலும் நிதான புத்தியுடன் செயல்படவும்.

கடகம்: பொறியியலாளர்கள் போற்றப்படுவர் நல்வாழ்வும் கிட்டும். கைத்தொழில் விருத்திக்கிடமுண்டு

சிங்கம்: நண்பர் ஒருவர் காலைவாரிவிடக் கூடும். வீண் விவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். பொறுமை விரும்பத்தக்கது.

கன்னி: மாதுருவழி ஆதரவு மகிழ்ச்சியில் ஆழ்த்தும் குறிக்கோள் வெற்றிக்கிடமுண்டு. கருத்தொழில் புரிவோர்க்கு நன்னாள்.

துலாம்: அரசியல்வாதிகளுக்கு நன்னாள் புதுத்தொழில்களில் நாட்டமேற்படும் கல்வியிலும் முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சிக்கல்கள் தோன்றும். குடும்பத்திலும் புயல் வீசும். அன்னியவாசமும் உண்டாம்.

தனுசு: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும். தொழில் சமவிருத்தியுமுண்டு.

மகரம்: தொல்லைகள் அதிகரிக்கும். கடன்படவும் நேரிடும் பிறருடன் யகைத்துக் கொள்ளவும் நேரிடலாம்

கும்பம்: குருவின் ஆசிமூலம் நல்வழியில் வீறுநடை போடுவீர்கள் பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள். கடமையிலும் நன்மாற்றம் ஏற்படும்

மீனம்: வரவிலும் உயர்வுண்டு புதுமனைச் சிறப்பு முண்டாம் விவசாயிகள் வாழ்க்கையில் ஆதாயமடைவர்.

திருமலை
வே. ரவீந்திரன்

சைவக்கிரியா மாமணி

ஸ்ரீஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினரின் சைவக்கிரியா மாமணி விருதுபெற்ற சான்றோர்களில் ஒருவரான சிவஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள் சைவசமய மக்களுக்கு ஆற்றியுள்ள சேவை காத்திரமானதாகும்.

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் கணிப்புக்குத் தன் திறமையை உதவிய இவர் திருநெல்வேலி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயப் பிரதமகுருமட்டுமன்றி இவ்வாலய பரம்பரைத் தர்மகர்த்தாவுமாவார்.

கோப்பாய் சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் சமஸ்கிருத மொழியறிவு பெற்றதோடு தமிழிலும் புலமைபெற்ற இவர் ஆலயக் கிரியைகளை நன்கு நிறைவேற்றுவதோடு புராணபடனங்களிலும் சைவமக்களுக்கு இனிது பயன்பட்டுள்ளார். இவ்வாண்டு நாவலர்சபை விருதுபெற்றவர்களுள் ஒருவராக விளங்கும் வருக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையும் 'சிவாகமக் கிரியாபூஷணம்' என்னும் பட்டமளித்துக் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஓர் அன்பர்

மரக்கறி விதைகளும் மரக்கன்றுகளும்

பருத்தித்துறை புதன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான நல்லின மரக்கறி விதைகளை முல்லைத்தீவு கமநலச் சேவைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது

மரக்கறி விதைகள் தேவைப்படும் விவசாயிகள் கமநலச் சேவை நிலையத்திலும் உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாமென முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் திரு வை எஸ் இராஜரட்ணம் அறிவித்துள்ளார்

திருமலைக்கு மாற்றம்

பருத்தித்துறை, புதன்

முல்லைத்தீவு மாவட்ட கமநலச்சேவைத் திணைக்களப்பகுதியில் உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய திரு பத்மநாதன் பதவிஉயர்வு பெற்று திருகோணமலை மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்

முன்னர் முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளராகக் கடமையாற்றி வெளிநாடு சென்று இலங்கை திரும்பியுள்ள திரு. வை எஸ். இராஜரட்ணம் முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளராக மீண்டும் பொறுப்பேற்றுள்ளார்.

சிறுமி பலி

மன்னார், புதன்

மன்னார் தோட்டவெளி கிராமசேவைஅலுவலர் பிரிவிலுள்ள கொள்ளையன் குடியிருப்பு என்ற கிராமத்தில் விளையாடிக் கொண்டிருந்த 11 வயது சிறுமி தற்செயலாகக் கிணற்றில் விழுந்து பலியானார் கிராமசேவை அலுவலரின் உதவியுடன் மரணவிசாரணை நடைபெற்று உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது [வா]

பிரயாண ஒழுங்குகள்

சவூதியில் கிளீனேர்ஸ் (Cleaners) 20 பேருக்கு வருமான வாய்புக்களுடன் பிரயாண ஒழுங்கு உடன் செய்துதரப்படும். 19-12-86-க்கு முன் பாஸ்போட் 6 படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

GROUP ATLANTIC

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக) [A3256]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இரண்டு பேர் ஒருபோதும் திருப்தியடையாதவர்கள்; ஒருவர் அறிவைத் தேடுபவர், மற்றவர் செல்வத்தைத் தேடுபவர்.

— அராபிய பழமொழி.

நமது நோக்கு

பொதுஜன வாக்கெடுப்பு: "நாளே அல்லவோ?"

உண்மைகளைக் கண்டு பிடித்து உயர வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர்கள் உயிருக்கு இடர் நேருவதையும் பொருட்படுத்தமாட்டார்கள்.

மனித உயிர் மீது கார்பன்மொனக்சைட் (Co) என்ற நச்சுக்காற்று என்ன விளைவுகளை உண்டாக்கும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் பேராசிரியர் ஹால்டேன் ஓர் அறையில் தன்னைப் பூட்டிக் கொண்டு அந்தப் புகையை இழுத்ததும், வெறி ஏறியவன போலாகி விட்டார். ஒன்றரை மணித்தியாலத்தில் வலிப்பு வந்து விட்டது அவருக்கு! உயிரையும் பணயம் வைத்து செயலில் ஈடுபட்ட பேராசிரியர் வெற்றியும் கண்டார்.

மக்களைப் பணயம் வைத்து ஆட்சிதன்னைத் தப்பிதத்துக் கொள்ள எடுத்த ஆராய்ச்சி ஜனநாயக சோஷலிச குடியரசு என்ற விலாசங் கொண்ட இலங்கையில் 1982ல் இடம் பெற்றது. அன்று ஆட்சி நடத்திய ஐ.தே.கட்சி இன்னும் ஆறு வருடங்களுக்குத் தொடர்வது உங்களுக்குச் சம்மதமா இல்லையா? என்பதே கேள்வி.

ஜனநாயக நாடுகளென்று தம்மைக்கூறிக் கொள்ளும் நாடுகளில் இலங்கை தவிர வேறெந்த நாட்டிலும் தேர்தலை ஒத்திப்போட இவ்வித 'ஆராய்ச்சி' இதுவரையும் நடத்தப்படவில்லை இவ்வித ''ஆராய்ச்சிக்கு'' ஆசிய நாடுகளின் அரசியல் சாசன எதுவும் இடமளிக்கவில்லை.

யாருக்கு என்ன நடந்தாலும் நாட்டின் நலனாட்சி குழப்பமோ தளப்பமோ அடையாது பாதுகாக்கும் பொருட்டு அரசியல் சாசனம் 83 வது ஷரத் இலங்கை ஆட்சியின் உயிரை நீடிப்பதற்கு வசதி செய்கிறது.

1982ல் நடைபெற்ற பொதுஜன வாக்கெடுப்பின் விளைவு இன்றைய ஆட்சி 1989 வரைக்கும் நீடிக்க சட்டம் இடமளிப்பது.

பொதுத் தேர்தல்பற்றி தூபமிடும் சிறிலங்காவுக்கு 1989 வரைக்கும் எவ்வித பொதுத் தேர்தலும் நடைபெறாதென்று கூறியிருக்கிறார் ஜனாதிபதி 1989ல் தானும் சூழ்நிலை கலவரத்திற்கும் குழப்பத்திற்கும் தூபமிடுமானால் மீண்டும் 'றெபெறன்டம்' என்றும் எச்சரித்திருக்கிறார் ஜனாதிபதி.

கடந்த பொதுஜன வாக்கெடுப்பு பற்றிய அறிக்கை நான்கு வருடங்களுக்குப் பின் வெளிவந்திருக்கிறது. அது கூறும் ஒழுங்கீனங்கள் 'பொதுஜன வாக்கெடுப்பு வெறும் கண்துடைப்பென்ற முடிவைச் சொல்லாமற்சொல்கிறது'

சட்டங்கள் மிகச் சாதாரணமாக மீறப்பட்டிருக்கின்றன; வாக்காளரின் உரிமை நிராகரிக்கப்பட்டிருக்கிறது. வாக்களித்தவர் தொகை 71 சதம், அதில் ஆட்சிக்காதரவாக 54.7 சதமென்றால் அந்தத் தீர்ப்பு சரியென்று ஆட்சிகொண்டிருக்கிறது அதற்கும் சட்டரீதியில் வழிவகுக்கப்பட்டது.

மக்களைப் பொறுத்தளவில் ஒரே ஆட்சியை 12வருடங்களுக்கு மக்கள் அங்கீகரித்தார்களென்று கொள்ள நியாயம் ஏதும் உண்டா?

விடயத்தின் விசித்திரம் வேறு இடத்தில்தான் உண்டு அது என்ன? 1982ல் பொதுஜன வாக்கெடுப்பு 1986ல் அதன் அறிக்கை பாராளுமன்றம் வந்திருக்கிறது அறிக்கை இந்த 'ஜனநாயக' நாட்டில் சடுதியான தீங்கு எதனையும் விளைவிக்காது.

இந்த அறிக்கையை சபையின் பொறுக்குக் கமிட்டி ஒன்று ஆராயும். அதன் பின் சபை விவாதிக்கும். இவ்வித தீர்மானம் சபையில் எடுக்கப்பட்டிருக்கிறது. இன்று நடைபெறும் இனப்பிரச்னை பேச்சுவார்த்தை போன்றது.

இரண்டொரு எதிர்க்கட்சி எம் பிக்கள் ஸ்ரீலங்கா என்றபோதும் காரசாரமான எதிர்ப்புக்களை தெரிவித்தனர்.

மிகச்சுவையான சோதிடம் சொன்ன ஒருவர் இது பற்றிய விவாதம் சபையில் வரமுன்னரே இன்னொரு றெபெறன்டம் நடந்தேறும் சாத்தியம் உண்டென்றார்.

இது கேலியா, நியாயமான தீர்க்க தரிசனமா?

பொதுஜன வாக்கெடுப்பு நடத்துவதன் பொதுவான நோக்கம் குறிப்பிட்ட ஒரு பிரச்னைபற்றி பொதுமக்களின் அபிப்பிராயம் தெரிந்துகொள்வதே அந்தப் பிரச்னை பெரும்பான்மை மக்கள் ஆதரிப்பதாக அல்லது எதிர்ப்பதாக விருக்க மாட்டாது: நாடளாவிய விடயத்தில் வாக்காளர் அபிப்பிராயம் கோருவதாயிருத்தல் வேண்டும்.

மேற்குநாடுகளில் செவ்வனே இது நடைபெறுகின்றது ஆசியநாடுகளில் ஆட்சிக்கு சாதகமானவகையில் 'ஆம்' என்ற பதிலைப் பெறும்வகையில் பொதுஜன வாக்கெடுப்புச்சாதாரணம்.

ஆனால் எவரும் நினைக்க முடியாத பொதுத்தேர்தலுக்கான பொதுஜனவாக்கெடுப்பு இலங்கையின் இன்றைய ஆட்சியின் சாமர்த்தியத்தைக் காட்டுகிறது.

இன்று மூன்று அரசியல் கட்சிகள் சேர்ந்து பொதுத் தேர்தல் நடக்கவேண்டுமென்று கோருகின்றன. இதற்குப் பலம்கிடைத்தால் பலன் என்னவாயிருக்கும்? மீண்டுமொரு 'றெபெறன்டம்'

பாராளுமன்ற தேர்தல் எத்தனை பெரிய பேர்வழிகளைப் பலியெடுத்திருக்கிறது. பல கட்சிகள் பல வேட்பாளர்கள் நடத்தும் பெரும்போரல்லவா? அது இன்றுநடைபெறும் ஆயுதப் போராட்டத்திலும் மோசமானது.

எனவே நாளே அல்லவோ? என்ற வினாவைத் [illegible] நீதான் - உன்னைவிட வேறு யார் என்ற விடை கிடைக்கும்?

உலக அரசியல் — அவதானி

ஆசிய - பசுபிக் பாதுகாப்புக்கு இந்தோ - சோவியத் நட்புறவு
அசைக்கமுடியாத அரண் என்கிறது டில்லிப் பிரகடனம்!
லத்தீன் அமெரிக்க நாடுகளில் 'இராட்சதன்' எனப்படும்
மெக்ஸிக்கோவின் இன்றைய எழுச்சி
கம்யூனிஸ்ட் மொங்கோலிய வெளி உலக நட்பை நாடுகின்றது
அமெரிக்க அதிபர் றீகனின் குறை நிறை என்னவானாலும்
ஐரோப்பிய சமுதாயம் அவருடைய தலைமையில் விசுவாசங்கொள்வதே
சுதந்திர நாடுகளையும் ஜனநாயகத்தையும் பேணும் ஒரேவழிஎன்றகோஷம்!

டில்லிப்பிரகடனம்

சோவியத் பெருந்தலைவர் கோர்பச்சேவ் இந்தியப் பிரதமர் ராஜீவுடன் சேர்ந்து உருவாக்கிய டில்லிப்பிரகடனம் எவ்வாறு செயற்படுமென்பதை அரசியல்தலைவர்கள் கூர்ந்து கவனிக்கின்றனர்.

சோவியத்தலைவரின் இந்திய விஜயம், எண்பதுகோடி இந்திய மக்கள் மத்தியில் அளவுகடந்த உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்குமுக்கிய காரணம் தலைவர் கோர்பச்சேவ் - அவர் ஒரு அதிமனிதன் மட்டுமல்ல, அசாதாரண அரசியல் ஆளுமை பெற்ற தலைவரென்ற நம்பிக்கையென்று கொள்ளப்படுகிறது. சில நாடுகள் மத்தியில் இதனால் எழுந்த பொறாமையும் பகைமையும் இதற்கு நல்ல சான்று.

பாகிஸ்தான் பெருக்கிவரும் எல்லைத்தொல்லைகள் சீனா இன்று எல்லைத்தகராறில் ஒரு புதிய நெருக்கடியை உண்டாக்குவதும், அருணாசலபிரதேசம் ஒரு இந்திய மாநிலம் என்ற தீர்மானம் சட்டவிரோதமென்பது, இலங்கைஒருமுறை, (Bigbully இன்னொருமுறை, Bigpulley என்ற அவநம்பிக்கை ஏற்படுத்தும் அயலவர் -இவை அனைத்தும், உள்நாட்டில் காணப்படும் பயங்கரவாதத்துடன் சேர்த்துப்பார்க்கில் - இந்தியா ஒருபெரும் நெருக்கடியில் அகப்பட்டிருக்கிறது என்ற அச்சம் உண்டாகும்.

ரஷ்யாவின் பரிபூரணநட்பே மேலே குறிப்பிட்டபல வயிற்றெரிச்சல்களுக்குக் காரணம். குறிப்பாக ஆப்கான் பிரச்னை பாகிஸ்தானை அமெரிக்காவின் வேட்டைநாயாக்கிவிட்டது, அமெரிக்காவின் ஷா போய் விட்டார், மார்க்கோஷ் போய்விட்டார், இன்றுபாகிஸ்தான் ராணுவஆட்சியின் தலைவர் ஸியாவிற்கு நாட்டிலே தலைநிறைந்த தொல்லைகள், அவற்றை திசைதிருப்ப அமெரிக்காவின் அபாண்டமான ராணுவ உதவி இந்தியாவிற்கு ஒரு அச்சுறுத்தலாக அமைவது உண்மை, சீக்கிய பயங்கரவாதத்திற்கு உறைவிடம் உதவுவதால் பஞ்சாப்பில் இந்திய ஆட்சியை நிலைகுலைக்கலாமென்ற நம்பிக்கை.

அடிக்கடி இந்தியப்பிரதமர் மக்களுக்கு விடுத்துவரும் எச்சரிக்கை, சில தினங்களில் இருநாடுகளுக்குமிடையே போர் மீண்டும் தொடங்குமென்ற அச்சத்தை ஏற்படுத்தும்தன்மையது. இன்று பாகிஸ்தானில் உள்நாட்டுக் கொந்தளிப்புக்கள் அனந்தம் இருப்பினும் அமெரிக்க ஆயுத உதவி பாகிஸ்தானை இன்னொரு முறை சண்டைக்கு ஏவிவிடும், டில்லிப்பிரகடனம் தாமதமின்றி செயற்படுமென்ற தன்னம்பிக்கை இந்தியாவிற்கு உண்டு.

சோவியத் தலைவரின் இலட்சியக்கண்டிப்பு இருந்தவாறிருக்க, அவரின் அரசியல் ஞானம் புதுமையுடைய உதவிகளைக் கொண்டிருப்பது உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகள் உறவில்காணப்படுகிறது சீனாவுடன் உறவுகொள்ள முயலும் கொர்பச்சேவ் அதற்கும், இந்தோ-சோவியத் நல்லுறவு அடிப்படையாயிருக்குமென்று உறுதிகூறியிருக்கிறார் ஆசியாவில இந்தியாவிற்குரிய இடம் அளிக்க முன்வந்த கொர்பச்சேவ், இவ்விடயத்தில் அமெரிக்கா இழைத்த பெருந்தவறை உலகுக்கு விளக்குகிறார்;

இந்தோ - சோவியத் நட்புணர்வு இந்திய விண்தொழில் தொழில் நுட்பம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை, கலாசாரம் போன்ற பலதுறைகளில் வேகமான வளர்ச்சிக்குதவும்.

ஆசிய பசுபிப் பாதுகாப்புத் திட்டத்தில் இது எவ்வாறு அமையும் என்று அமெரிக்கர் மிக்க விழிப்பாகஇருப்பதாகவும், இதன்பலாபலம் எதிர்காலத்தில் எவ்வாறு அமையுமென்பதையும் மதிப்பிடுகின்றது! பாகிஸ்தானுக்கு உதவும் நவீனராணுவஆயுதங்கள் இந்தியாவைப பாதிக்காதென்ற வாக்குறுதி மட்டும் போதாது. இந்தியாவிற்கு வேண்டிய உயர்தர தொழில் நுட்பசாதனங்கள் வழங்குவது நிச்சயமென அறிவித்திருக்கிறது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வென்பேகர் கொர்பச்சேவை ஒருபொய்யன் என்பதும், இதற்குமுன் மேற்கு ஜேர்மன் அதிபர் கோல் ரஷ்ய தலைவரை ஏளனம் செய்ததும் கொர்பச்சேவின் அசாதாரண ஆளுமையின் அறிகுறிகளே.

இன்று அமெரிக்கா, இந்தியா, சோவியத் நட்புறவு விரிசலடையாத ஒரு சாதாரண கொடுக்கல்வாங்கலென்றும் அமெரிக்காவின் உறவையே இந்தியா உண்மையல நாடுமென்றும் தன்னைத் தேற்றிக்கொள்கிறது.

மெக்ஸிக்கோ

லத்தீன் அமெரிக்க நாடுகளில் மெக்ஸிக்கோ மிகப் பெரியது; ஐக்கிய அமெரிக்காவின் நிலப்பரப்பளவுடையது. ஆனால் ஜனத்தொகை அரைமடங்கு மிகப் பின்தங்கிய நாடாகவிருந்த நாடு இன்று மூன்றுமூலசில முன்னிடம் வகிக்கிறது பலமூலப்பொருள்கள் பயன்படுத்தாத வகையிலிருந்ததால் அதன் செல்வம் குறைந்திருந்தது பொருளாதாரவளர்ச்சிஇன்றேல் அதன் தேசிய பலம் வெளிவராது. இன்றைய ஜனாதிபதி 56 வயதுடைய டீலாஸ் சாரணி மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கிறார். மிகப் பயங்கரமான சட்டங்களை அமுல் படுத்தி மக்களின் காணிப் பிரச்னையை ஜனநாயக ரீதியில் தீர்த்துவைப்பதற்கு திடசங்கற்பம் கொண்டிருக்கிறார்

தென் அமெரிக்க நாடுகளைப் போல இனவாதம், இனப் பிரச்னை எதுவும் இல்லாதிருந்த நாடு வல்லரசுகளின் கெடுபிடியிலிருந்து தப்பி தன் கையே தனக்குதவியென்ற கொள்கையில் முன்னேறுகிறது மிகப் புராதனமான நாகரீகமடைந்த நாடு அமெரிக்காவின் அயலில இருப்பதால் அமெரிக்க உதவியுடன் அதனைக் கூட்டி முந்தும் வல்லமை அதற்கு எதிர்காலத்தில் உண்டு புதிய நாடாக அது மிளிருமென்ற நம்பிக்கை மக்கள் தலைவர் அதிபர் சாரனேக்கு அதிகம் உண்டு. அமெரிக்கா அதனை இரண்டாந்தர நாடாக நினைப்பது தவறென்று அதன் எதிர்காலம் காட்டும்.

மொங்கோலியா

சீனாவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையில் நெரிந்து கொண்டிருக்கும் மொங்கோலியா பற்றி உலகம் அறியாது. பெரும் நிலப்பரப்பு, ஜனத்தொகை மிகக் குறைவு. 1924ல சோவியத் ரஷ்யாவால் அங்குராப்பணம் செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் நாடு ரஷ்யாவிற்கு விசுவாசமாகவே இருந்து வருகிறது சீனாவுடன் 2650 மைல் தூர எல்லை கொண்ட நாடு. சில மாற்றங்களைக் காண விரும்புவது இயற்கை. ஆனால் எல்லையில் 60,000 ரஷ்யபடையினர் காவல் நிற்கின்றனர்.

சீன-ரஷ்யா உறவு வலிமை பெற சீனாவுடன் தொடர்பு கொள்ள மொங்கோலியாவிற்கு வசதி ஏற்படும். ஏன், வாஷிங்டனிலும் ஒரு தூதரகம் அமைக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

நாட்டில் எங்கு சென்றாலும சோஷலிச சித்தாந்த தந்தைகள் லெனின் ஸ்டாலினதும் இன்று கொர்பச்சேவினதும் படங்கள் தொங்க விடப்பட்டிருக்கின்றன. மொங்கோலிய தலைவர்களின் படங்களும் சரிநிகர் சமமாகக் காணப்படுகின்றன.

தேசிய மறுமலர்ச்சி உருவெடுத்திருக்கிறது. ஆனால் சோவியத் ரஷ்யாவுடன் நட்புடனும் நம்பிக்கையுங்கொண்ட நாடாகவே இருந்து வருகிறது.

அமெரிக்க, பிரிட்டிஷ் மேற்கு ஐரோப்பிய ஆதிக்கம

சோவியத் ரஷ்யாவின் இராணுவ பலத்தையும் அதன் பரிவாரங்களின் ஒருமைப்பாட்டையும் அஞ்சும் நேற்றோ நிறுவனம், இன்று அதன் பெருந்தலைவரான றீகன் சூடுபட்ட பூனைபோல சுழலுகிறதைக் கண்டு அதற்கேற்ற உஷார் நிலையைச் சரி செய்பணிடுகின்றது.

1988ல் வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று றேகனின் நிர்வாக ஒழுங்கீனங்களால் அவருடைய கட்சிக்குபாதிப்பு ஏற்படுத்தலாம் அதன் விளைவாக அமெரிக்க

[6ம் பக்கம் பார்க்க]

1964-ம் ஆ...
காணி எடுத்தல்...
திருத்தப்பட்டவா...
(அ...

[காரைநகர் கட...
கா...

அறி...

உதயன் / ஈழமுரசு ... முறையே 06-09-14... களில் மேற்படி விட... கரிப்பு அறிவித்தலி... கள் விசாரிக்கப்பட்... பிடப்பட்டுள்ள ... எதிரே குறிப்பிடப்... கக் காணப்பட்டுள்... பீட்டாளரால் விடு... தொகையின் ஒரு ப... பதற்கு நான் நடவ... இத்தால் அறியத்த...

உத்தரவுபெற்ற நில அ... திரு. எ வி. ஞானரத்... தயாரிக்கப்பட்ட பட இ...

01. பட இல. 582 | ... கண... பத்தி...
02. பட இல. 593 | ... ஆறு... புது...
03. பட இல. 589 | ... முருகே...
04. பட இல. 595 | ... கந்தை... (பரா...
05. பட இல. 608 | ... கந்தை... காரை...
06. பட இல. 603 | ... மாதவ... காரை...
07. பட இல. 592 | ... சந்தச... 27, ...
08. பட இல. 514 | ... முருகே... சத்திர...
09. பட இல. 576 | ... சுப்பிர... ருக்கு... பால... காரை...
10. பட இல. 573 | ... சிவகட... சக்தி...
11. பட இல. 548 | ... நாகன்... சாந்தி...
12. பட இல. 516 | ... காசிப்... விளாக...
13. பட இல. 513 | ... சபார... காரை...
14. பட இல. 510 | ... நவரத்... 224/1, ...
15. பட இல. 508 | ... சுப்பிர... தில்லை... காரை...
16. பட இல. 566 | ... ப ஆ... தங்கே...
17. பட இல. 570 | ... சோப... பலகா...
18. பட இல. 502 | ... செல்லை...
19. பட இல. 501 | ... அம்பி... பொன்...
20. பட இல. 534 | ... செல்லை... காரை...
21. பட இல. 586 | ... நமசிவ... 307, ... திருநெ...
22. பட இல. 584 | ... சிதம்ப... பரமே...
23. பட இல. 588 | ... சிவசம்... சாங்க...
24. பட இல. 596 | ... கதிரே... சம்பந்... லுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964-ம் ஆண்டின் 28-ம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தின்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)

[காரைநகர் கடற்படைத்தள விஸ்தரிப்புக்கு காணி சுவீகரித்தல்]

அறிவித்தல்

உதயன் / ஈழமுரசு / ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் முறையே 86-09-14ம், 86-09-15ம், 86-09-15ம் தேதிகளில் மேற்படி விடயம் தொடர்பாக வெளிவந்த சுவீகரிப்பு அறிவித்தலினால் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் விசாரிக்கப்பட்டன இதன் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகளுக்கு அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளோர் உரிமையாளர்களாகக் காணப்பட்டுள்ளனர் இவர்கட்கு பிரதான மதிப்பீட்டாளரால் வீடுகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஒரு பகுதியை முற்பணமாகக் கொடுப்பதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ரவுபெற்ற நில அளவையாளர்
எ வி. ஞானரத்தினம் அவர்களால்
ரிக்கப்பட்ட பட இல / திகதி

உரிமையாளர் பெயரும்
விலாசமும்

பட இல. 582 / 16-3-86
கணபதிப்பிள்ளை சனகசபாபதி, 106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பட இல. 593 / 16-3-86
ஆறுமுகம் தம்பையா, சிவன்கோவில் வீதி, புது ரோட், காரைநகர்.

பட இல. 589 / 16-3-86
முருகேசு வேலுப்பிள்ளை, ஆயிலி, காரைநகர்.

பட இல. 595 / 16 3-86
கந்தையா பழனிவேலு மகள் ஜெயதேவி (பராயமற்றவர்), பலுக்காடு, காரைநகர்.

பட இல. 608 / 16-3-86
கந்தையா சபாரட்டினம், பத்தர்கேணியடி, காரைநகர்.

பட இல. 603 / 18-3-86
மாதவன் பெண் லீலாவதி, பத்தர்கேணியடி, காரைநகர்.

பட இல. 592 / 16-3-86
சந்தசாமி பெண் வளர்மதி, 27, கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பட இல. 514 / 10-3-86
முருகேசு கைம்பெண் பரமேஸ்வரி, சத்திரந்தை களபூமி, காரைநகர்.

பட இல. 576 / 15 3-86
சுப்பிரமணியம் இராசலிங்கம் பெண்ருக்கு ணிதேவியும், பாலாவோடை ரோட், பொட்டப்புலம், காரைநகர்.

பட இல. 573 / 15-3 86
சிவகடாடசம் சபாநடேசன் பெண் பராசக்தி, சந்தப்புளியடி, காரைநகர் வடக்கு.

பட இல. 548 / 12-3-86
நாகன் ஆறுமுகம் கைம்பெண் யோகம், சாந்திபுரம், காரைநகர்.

பட இல. 516 / 10-3-86
காசிப்பிள்ளை கைம்பெண் அன்னபூரணம், விளானை களபூமி, காரைநகர்.

பட இல. 513 / 10-3 86
சபாரத்தினம் கந்தசாமி, பலகாடு, காரைநகர்

பட இல. 510 / 10 3-86
நவரத்தினம் பெண் லீலாவதி, 224/1, பலுக்காடு, காரைநகர் மேற்கு.

பட இல. 508 / 10 3-86
சுப்பிரமணியம் இரத்தினம் பெண் தில்லையம்மா, சத்திரந்தை களபூமி, காரைநகர்

பட இல. 566 / 14 3-86
ப இராமநாதன் பெண் சாவித்திரி, தங்கோடை, காரைநகர்.

பட இல. 570 / 14-3-86
சோமசுந்தரம் கைம்பெண் அன்னம்மா, பலகாடு, காரைநகர்.

பட இல. 502 / 10-3-86
செல்லையா கனகசபை, பலகாடு, காரைநகர்.

பட இல. 501 / 10-3 86
அம்பிகைபாகன் பெண் செங்காதேவி, பொன்னாவளை களபூமி, காரைநகர்.

பட இல. 534 / 11-3-86
செல்லையா இராமுப்பிள்ளை, பலகாடு, காரைநகர்.

பட இல. 586 / 15-3 86
நமசிவாயம் பெண் நாகேஸ்வரி, 307, பலாலி வீதி, கந்தர்மடம், திருநெல்வேலி.

பட இல. 584 / 16-3-86
சிதம்பரப்பிள்ளை நடராசாவும் பெண் பரமேஸ்வரியும், பெரியவளவு, காரைநகர்.

பட இல. 588 / 16-3-86
சிவசம்பு திருநாவுக்கரசு, சருங்காலி காரைநகர்.

பட இல. 596 / 18-3-86
கதிரவேலு, சண்முகரெத்தினம், சம்பந்தர்கண்டி, காரைநகர் (ஈட்டிலுள்ளது).

25. பட இல. 580 / 16-3-86
கந்தையா ஆறுமுகம் மகள் கமலம், கருங்காலி, காரைநகர்.

26. பட இல. 606 / 18-3-86
சண்முகராசா பெண் நாசராஜேஸ்வரி, கருங்காலி, காரைநகர்.

27. பட இல. 590 / 16-3-86
காசிநாதர் தெய்வேந்திரம், கருங்காலி, காரைநகர்.

28. பட இல. 609 / 18-3-86
பொன்னுத்துரை கைம்பெண் பாக்கியத்துக்கும் அவரது பிள்ளைகள் சுப்பிரமணியம், கமலாதேவி ஆகியோருக்கும், வலந்தலை, கணக்கனார்கண்டி.

29. பட இல. 599 / 18-3-86
கந்தர் தம்பையா, பிள்ளையார் கோவிலடி, காரைநகர் மேற்கு.

30. பட இல. 607 / 18-3 86
பேரம்பலம் கந்தசாமி பெண் சிவயோகம், பலுகாடு, காரைநகர்.

31. பட இல. 569 / 14-3-86
செல்லத்துரை ஞானேந்திரன், ஆயிலி, காரைநகர்.

32. பட இல. 503 / 0 3-86
நடராசா பெண் அன்னம்மா, வாரிவளவு பிள்ளையார் கோவிலடி, காரைநகர்.

33. பட இல. 517 / 10-3-86
கந்தையா கைம்பெண் தங்கமுத்து, நீலிபந்தனை, புதுரோட், காரைநகர்.

34. பட இல 524 / 10-3-86
முருகேசு கைம்பெண் தெய்வானை, சேவகர் கோவிலடி, வலந்தலை, காரைநகர்.

35. பட இல. 526 / 10-3-86
முருகேசு மகள் சரஸ்வதி, சேவகர் கோவிலடி, வலந்தலை, காரைநகர்.

36. பட இல. 529 / 10-3-86
வேலுப்பிள்ளை கைம்பெண் நாசம்மா, சத்திரந்தை, களபூமி, காரைநகர்.

37. பட இல. 530 / 10 3-86
சோமசுந்தரம் பெண் தனலெட்சுமி, விளானை, களபூமி, காரைநகர்.

38. பட இல. 528 / 10-3-86
சுப்பிரமணியம் கந்தையா பெண் சரஸ்வதி, சத்திரந்தை, களபூமி, காரைநகர்.

39. பட இல. 550 / 12-3-86
மெய்யழகன் பெண் ஜெயா, சாந்திபுரம், காரைநகர்.

40. பட இல. 551 / 12-3-86
சிறியாணி டி சில்வா (பராயமற்றவர்), சாந்திபுரம், காரைநகர்.

41. பட இல. 552 / 549 / 12-3-86
கந்தர் கதிர்காமுவின் உரிமைக்காரர் குமாரன் உமாதேவி, வைரமுத்து அமராவதி, மோஸஸ் சாவித்திரி என்போர் வீட்டுக்கு உரிமை கோருகின்றனர். சாந்திபுரம், காரைநகர்.

42. பட இல. 538 / 11-03-86
வேலன் கந்தசாமிக்கும் காலஞ்சென்ற வேலன் கந்தசாமிக்கு பெண் செல்லம்மாவின் உரிமைக்காரரும், சாந்திபுரம், காரைநகர்

43. பட இல. 533 / 11-03-86
கதிரன் பெண் நாகம்மா, சாந்திபுரம், காரைநகர்.

44. பட இல. 53[illegible] / 11-03-86
கந்தசாமி கைம்பெண் யோகம்மா, சாந்திபுரம், காரைநகர்

45. பட இல. 531 / 10-03-86
பூதன் முருகன், சாந்திபுரம், காரைநகர்.

46. பட இல. 567 / 14 03-86
செல்லத்துரை ரவீந்திரன், பெரியமணல், காரைநகர்

47. பட இல. 568 / 14 03-86
செல்லையா கணேசமூர்த்தி வீட்டுக்குஉரிமை கோருகின்றார், பெரியமணல், காரைநகர்.

48. பட இல. 613 / 18-03-86
நடராஜா கைம்பெண் இராசலட்சுமி, சம்பந்தர்கண்டி, காரைநகர்.

49. பட இல. 6[illegible]4 / 18-03 86
அருணாசலம் சோமசுந்தரம், வேம்படி, காரைநகர்.

50. பட இல. 610 / 19-03-86
குழந்தைவேலு சிவப்பிரகாசம், 118, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

51. பட இல. 605 / 18-03-86
சிவப்பிரகாசம் பெண் சவுந்தரம், மணற்காடு, காரைநகர் வடக்கு

52. பட இல. 620 / 19-03-86
கனகசபை பெண் பரமேஸ்வரி, வியாவில் கருங்காலி காரைநகர் [யாழ் மாவட்ட நீதிமன்று ஈடு / 1522ம் இலக்க வழக்கின் தீர்வைக்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது]

53. பட இல. 6[illegible]1 / 19 03-86
குழந்தைவேலு இராசலிங்கம், புதுரோட்டு காரைநகர்

54. பட இல. 616 / 18-03-86
சின்னத்தம்பி செல்லத்துரை, பலுகாடு, காரைநகர்

55. பட இல. 600 / 18-03-86
முருகன் ஐயன், நீலக்காடு, காரைநகர்.

56. பட இல. 601 / 18-03-86
ஐயன் செல்லத்துரை, பலகாடு, காரைநகர்.

57. பட இல. 602 / 18 03-86
ஐயன் மாணிக்கத்துக்கும் பெண் செல்லம்மாவுக்கும் பலுகாடு காரைநகர் மேற்கு.

58. பட இல. 520 / 10-03-86
சண்முகம் இராமலிங்கம்; சாந்தம்புளியடி காரைநகர்

59. பட இல. 537 / 11-03-86
கந்தையன் முருகன், சாந்திபுரம், காரைநகர்.

60. பட இல. 554 / 12-03-86
நாகமுத்து தேவராசாவின் உரிமைக்காரர், சாந்திபுரம், காரைநகர்.

61. பட இல. 545 / 12-03-86
முருகன் இளையதம்பியின் உரிமைக்காரர், சாந்திபுரம், காரைநகர்.

62. பட இல. 556 / 13-03-86
கந்தையா செல்வராசா பெண் தேவநாயகி, சாந்திபுரம், காரைநகர்.

63. பட இல. 559 / 13-03-86
கந்தன் வேலன், சாந்திபுரம், காரைநகர்.

64. பட இல. 555 / 12-03-86
பூதன் முருகனுக்கு 7/8 பங்கும் பூதன் மகள் இராசமணிக்கு 1/8 பங்கும், சாந்திபுரம், காரைநகர்.

65. பட இல. 544 / 12 03-86
சின்னட்டி வேலனுக்கு 9/10 பங்கும் சின்னட்டி மகள் நாகம்மாவுக்கு 1/10 பங்கும், சாந்திபுரம், காரைநகர்.

66. பட இல. 533 / 12-03 86
சின்னட்டி ஆறுமுகம், சாந்திபுரம், காரைநகர்

67. பட இல. 561 / 14-03-86
சின்னட்டி முருகன், சாந்திபுரம், காரைநகர்.

68. பட இல. 562 / 14-03-86
சின்னட்டி கந்தையா, சாந்திபுரம், காரைநகர்

69. பட இல. 541 / 12-03-86
முருகன் சின்னப்பு பெண் சின்னம்மா, சாந்திபுரம், காரைநகர்.

70. பட இல. 535 / 11-03-86
செல்லத்துரை கணேசமூர்த்தி, பெரியமணல், காரைநகர்.

71. பட இல. 576 ஏ / 15-03-86
வைத்திலிங்கம் செட்டியார் கந்தப்பர் செட்டியார், தர்மகர்த்தாவும் முகாமையாளரும், வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம், வண்ணார் பண்ணை. [வேம்படி, காரைநகர், கந்தையா பரம்சோதியும் யோகேஸ்வரன் பெண் தவமணியும் வீட்டுக்கு உரிமை கோருகின்றனர்]

72. பட இல. 580 / 16-03-86
ஆறுமுகம் மகள் கமலம், பலுகாடு, காரைநகர்.

73. பட இல. 615 / 18-03 86
காலம்சென்ற கந்தையா பொன்னம்பலத்தின் உரிமைக்காரருக்குரியது, பலுகாடு, காரைநகர்

74. பட இல. 557 / 13-03-86
மகாலிங்கம் தேவராசா அல்லது சற்குணராசா, வெடியரசன் வீதி, காரைநகர் [ஆறுமுகம் மகாலிங்கம் கட்டிடத்திற்கு உரிமைகோருகின்றார்]

மேற்கண்ட கொடுப்பனவுக்கு ஆட்சேபனையேதும் இருப்பின் 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 23ம் தேதிக்கு முன் கீழ் குறிக்கப்பட்டுள்ள விலாசத்துக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ச. பொ. பாலசிங்கம்,
உதவி அரசாங்க அதிபர் [காணி]
யாழ் மாவட்ட செயலாளரும்
அரசாங்க அதிபருக்குமாக.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
[A-3343]

"போஷாக்குத் தேவையை சூழலிலுள்ள உணவுப் பொருள்கள் ஈடுசெய்கின்றன"

பண்டத்தரிப்பு, புதன்

"எமது இளம் சந்ததியினர் நிடகாத்திரமானவர்களாக வாழ்வதற்கும், நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும்போஷாக்கு உணவு மிகவும் அவசியம். எமது சூழலிலுள்ள இலகுவாகப் பெறக்கூடிய சத்துமிக்க உணவுப்பொருட்களை நன்கு பயன்படுத்த வேண்டும் போஷாக்கு உணவு பற்றிய அறிவை வளர்ப்பதற்கு இது போன்ற பயிற்சிக்கருத்தரங்குகள் பேருதவியாக இருக்கும்"

இவ்வாறு யாழ் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான போஷாக்கு பயிற்சிக்கருத்தரங்கை பண்டத்தரிப்பு வை எப் சி ஏ மண்டபத்தில் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிக்கருத்தரங்கில் 24 யுவதிகள்கலந்து கொண்டனர். செல்வி சாந்தி சுப்பிரமணியம் தமது தலைமை உரையின்போது;

"எமது முன்னோர்கள் தங்கள் உணவில் சத்துமிக்க போஷாக்கு மிக்க உணவு வகைகளை சேர்த்து பயன்படுத்தியதினால்தான் சிறந்த உடலுறுதிமிக்கவர்களாக திகழ்ந்தார்கள். இறக்குமதியாகும் உணவுப்பொருட்களை பயன்படுத்துவதை குறைத்து எமது பகுதியிலுள்ள சத்துமிக்க உணவுவகைகளை பயன்படுத்த முன்வரவேண்டும் என்றார்.

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தலைவர் ஆ. யேசுதாசன், சில்லாலை மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி பேளி அத்தனாசியார், பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க இலுவலர் வை. பாலகிருஷ்ணன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சபா நாராயணன், ஆசிரியர் சு. இரத்தினவேல் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. கிவாராசா நன்றியுரை கூறினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்ல டாக்டர் எஞ்சினியர் போல் நல்ல எழுத்தாளரும் தேவை'

பேராசிரியர் சிவத்தம்பி

யாழ்ப்பாணம், வியாழன் "பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து நுகர்ச்சிப் பொருட்களை விநியோகிக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் மக்களின் கலைத் தேவைப் படைப்பான சிறுகதைகளையும் தொகுத்து நூலாக விநியோகிக்க முன்வந்திருப்பதுபாராட்டிற்குரியது. கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கிராமப்புற மக்களுக்கு இலக்கியங்களை விநியோகிக்க முடியும். எழுத்தாளர்களுக்கு இன்று ஓர் சமூக அந்தஸ்து உள்ளது. இச்சமூக ஏற்புடமையை நீங்கள் எதற்காகப் பயன்படுத்தப் போகிறீர்கள். இன்றைய சமூகமாற்றத் தேவையையும் வேகத்தையும் விட்டுவிடக்கூடாது எமக்கு நல்ல டாக்டர்களும் நல்ல எஞ்சினியர்களும் தேவைப்படுவதுபோல நல்ல தரமான எழுத்தாளர்கள் தான் தேவை."

இவ்வாறு பன்னிரண்டு எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதியான உயிர்ப்புக்கள்' வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில் கூறினார்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்குச் சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்தார். இவர் பேசுகையில், எமது எழுத்தாளர்களைக் கௌரவிக்குமுகமாகவே அவர்களது படங்களை அட்டையில் பிரசுரித்ததுடன் அவர்களைப்பற்றிய விபரங்களையும் உள்ளே பிரசுரித்துள்ளோம் என்றார்

பண்டிதர் திரு க. வீரகத்தி ஆசியுரை வழங்கினார் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆசிரியர் திரு. கே. தங்கவடிவேல் வெளியீட்டுரை நிகழ்த்துகையில், பன்னிரண்டு எழுத்தாளர்களும் தத்தம் ஆற்றல்களுக்கேற்பச் சிறுகதைகளைப் படைத்துள்ளார்கள். சுதந்திரமான விமர்சன உலகில் ஒருவருடைய அளவுகோல் மாத்திரம் விமர்சனமாகாது சிறுகதைகள் காலத்தின் கண்ணாடி என்று புதுமைப்பித்தன் சொன்னது போல இத்தொகுதியும் சமகாலத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது என்றார்.

வெளியீட்டுரையைத் தொடர்ந்து நூலின் முதற்பிரதியை பேராசிரியர் கா. சிவத்தம்பியிடமிருந்து ரெலிகுளோப் அதிபர் திரு ம. சிவராசா பெற்றுக் கொண்டார்

வைத்திய கலாநிதி எம் கே. முருகானந்தம் பேசுகையில், எதிர்காலத்தில் இப்பெருமன்றம் எமது பகுதி நாட்டார் பாடல்கள், பழமொழிகள்' நடோடிக் கதைகளையும் தொகுத்து நூலாக வெளியிட வேண்டும் என்றார்.

திருமதி கோகிலா மகேந்திரன் பேசுகையில், 'உயிர்ப்புக்கள்' தொகுதியை வாசித்த எவரும் இக்கதைகள் வடமராட்சி மண்வாசனையைப் பிரதிபலிக்கின்றன என்பதை ஒப்புக் கொள்வர் என்றார்.

முரசொலி ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வமும் பேசினார்.

பன்னிரண்டு எழுத்தாளர்கள் சார்பிலும் திருவளர்கள் குப்பிழான் ஐ. சண்முகன், தெணியான் ஆகியோர் உரைநிகழ்த்தினார்கள்.

ஆரம்பத்தில் சங்க உபதலைவம் திரு செ. சதானந்தன் வரவேற்புரை கூறினார். விழாவின் இறுதியில் நன்றி கூறிய கலாசார கூட்டுறவுப் பெருமன்ற அமைப்பாளர் திரு நெல்லை க. பேரன், பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபையைப் பாராட்டியதுடன் சக எழுத்தாளர்களான தெணியான், த. கலாமணி, சி. வன்னியகுலம், குப்பிழான் ஐ. சண்முகன், கருணையோகன், க நவம், கண. மகேஸ்வரன், கி பவானந்தன், ச. முருகானந்தன், க. சின்னராஜன் ஆசியோரது முயற்சிகளையும் பாராட்டிப் பேசினார்.

தொற்றுநோயில் இருந்து மக்களைக்காப்பாற்றவேண்டும்

சுன்னாகம், புதன் :'எமது மக்களை தொற்று நோய்களில் இருந்து காப்பாற்றி முழுசமுதாயமும் நோயயற்ற வாழ்வு வாழ நாம் வழி காட்டவேண்டும். தொற்று நோய்களை ஆரம்பத்திலே அழித்துவிடவேண்டும். தொற்றுநோய்கள் பரவுமானால் எமது இனமே அழியும் அபாயத்தில் சிக்கிவிடும்.''

இவ்வாறு உடுவில் வை எம். சி. கட்டிடத்தில் உடுவில் ஆரம்ப சுகாதார நிலையத்தினரின் சிறப்பு கூட்டத்திற்கு தலைமைவகித்து பேசியசைவப் புலவர் திரு எஸ் சிறிதயாளன் குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்து பேசுகையில் கிராம மட்டத்தில் நோய்களை அறிந்து அவற்றை நாம் எவ்வளவு சுலபமாக அழிக்க முடியுமோ அவ்வளவு சுலபமாக அழிக்கவேண்டும்

எமதுபிரதேசத்தில் புதுமடபகுதியில் சிரங்குநோய் மிக தீவிரமாக பரவி உள்ளது அதனைஅழிக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கசநோய் தடுப்பு இயக்க அமைப்பாளர் திரு எஸ். பேரானந்தநாதனும் கசநோய் பற்றி சில கருத்துக்கள் வழங்கினார்.

செல்வி சி இராஜேஸ்வரி நன்றிகூறினார். [வா]

முகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடாநாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிரயாண ஒழுங்குகள்

★டென்மார்க் ★கனடா

★லண்டன் (U. K.) ★ஜெர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்.

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட்: பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

GROUP ATLANTIC TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி; யாழ்ப்பாணம்.

(அடைக்கலமாதா கோவில் முன்பாக (A 3223)

வடக்கு - கிழக்கில்

நவம்பரில் கொலைகள் 113, காயமுற்றோர் 176

யாழ்ப்பாணம், வியாழன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த நவம்பர்மாதம் ஆயுதப்படை நடவடிக்கைகளினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 113 என்று பிரஜைகள குழுக்களின் ஒருங்கிணைப்புக்குழு அறிவித்துள்ளது. குழு வித்டுதுள்ள அறிக்கையின்படி கடந்த மாதம் 176 பேர் காயமுற்றுள்ளனர்.

ஒருங்கிணைப்புக்குழு விடுத்துள்ள மேற்படி அறிக்கையில் மாவட்ட ரீதியிலான விபரம் வருமாறு-

அம்பாறையில் கொல்லப்பட்டோர் 12, மட்டக்களப்பில் கொலைசெய்யப்பட்டோர் 36, காயப்பட்டோர் 21, திருகோணமலை 8, முல்லைத்தீவில் கொலைசெய்யப்பட்டோர் 8, காயப்பட்டோர் 7, யாழ்ப்பாணத்தில் கொலைசெய்யப்பட்டோர் 24 காயப்பட்டோர் 138, மன்னாரில் கொலைசெய்யப்பட்டோர் 18, வாவனியாவில் கொலைசெய்யப்பட்டவர் 1, காயப்பட்டோர் 6 கிளிநொச்சியில் கொலைசெய்யப்பட்டோர் 5, காயப்பட்டோர் 4 ஏனைய இடங்களில் கொலைசெய்யப்பட்டவர் 1.

புதிய சட்டத்தரணி

யாழ்ப்பாணம், வியாழன் திருநெல்லேலி கிழக்கைச் சேர்ந்த கா. முருகதாஸ் இராதாக்கிருஷ்ணன் அண்மையில் உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா மற்றும் நீதியரசர்களான அத்துகோறள, டீ சில்வா ஆகியோர் முன்னிலையில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டத்தரணியான இவர் திருநெல்லேலி செங்குந்தா இந்துக்கல்லூரி, யாழ் பரியோவான்கல்லூரி, கொழும்பு சட்டக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் திரு கிருஷ்ணபிள்ளை கார்த்திகேசுவின் மகனுமாவார்.

ரேபிள்ரெனிஸ் போட்டி

உரும்பராய், புதன் யாழ். மாவட்டத்துக்கான ரேபிள் ரெனிஸ் சுற்றுப்போட்டியை விளையாட்டமைச்சு அடுத்த மாதம் நடத்தவுள்ளது.

தைமாதம் 3ம், 4ம் திகதிகளில் நடைபெறவுள்ள. இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி மேற்கொண்டுவருகின்றார். ஆண்கள் பெண்கள் இருபாலரும் பங்கு கொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்ளும் கழகங்கள் இம்மாதம் 20ம் திகதிக்கு முன் நல்லூர் உதவி அரசாங்க அதிபர்பிரிவு விளையட்டதிகாரி செல்வி யசோதாவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். [வா]

1250 தொன் சீனியுடன் கப்பல் வருகின்றது

யாழ்ப்பாணம் வியா 1250 தொன் சீனியுடன் "மேர்க்ஸ் ஊவா" எனனும் கப்பல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது

சீனிக்கப்பல் துறைமுகத்தை வந்தடைந்ததும் பறியல்வேலைகள் ஆரம்பமாகும் எனவும் அடுத்த திங்கட்கிழமை முதல் இச்சீனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படும் என யாழ் உணவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனிக்கப்பலைவிட 950தொன் மாவுடன் ஏற்கனவே கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் வந்து தரித்துநிற்பதாகவும் யாழ்மாவட்டத்தில் சீனிக்கும் மாவுக்கும் எந்த வித தட்டுப்பாடும் ஏற்படமாட்டாதெனவும் அந்தஅதிகாரிமேலும் தெரிவி தார். [வா]

ஆசிய-பசுபிக்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுக் கொள்கை மாற்றமடையலாம்.

அ[illegible] என்னவானாலும் சோவியத் ஆதிக்கம் சுதந்திர உலகையும் ஜனநாயகத்தையும் பாதிக்காது காக்கும் பொறுப்பு தம்முடையது என்று முன்னைநாள் ஜனாதிபதி நிக்ஸன் வாட்டர்கேட்] இன்றைய பிரச்னையிலிருந்து அமெரிக்க மக்களைத் திசை திருப்ப முயல்கின்றார். இதனையே றீகனின் உதவியாளர்கள் பாதுகாப்பு அமைச்சர், உபஜனாதிபதிஷூல்சும் ஐரோப்பாவில் துரிதப்படுத்துகின்றனர். மேற்கு ஜேர்மன் அதிபர் கோல் புது வருடத் தொடக்கத்தில் தேர்தலை எதிர்நோக்குகின்றார். பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் 1987ல் தர்தலை நடாத்தி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற திட்டமிட்டிருக்கிறார். அமெரிக்க ஐரோப்பிய சமுதாயம் உலகை ஆட்டிப் [illegible] வேண்டுமென்ற அவாகைகூடுமா.

மாணவர் உள, உடல், சமூக வளர்ச்சிக்குவிளையாட்டு உதவும்

சாவகச்சேரி புதன். "பாலர் முன்னோடிப் பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்களின் உள, உடல் சமூக வளர்ச்சிக்கும் விட்டுக்கொடுத்தும் மனப்பான்மையை உருவாக்கவும் விளையாட்டுப் போட்டிகள் மிகவும் உதவி புரியும் இவ்வகையில் கள்ளிநகர் அறவழி பாலர் கழகத்தின் விளையாட்டுப்போட்டி மிகவும் பாராட்டப்படவேண்டிய நன்முயற்சியாகும்."

இவ்வாறு யாழ் மாவட்ட சாரணர் இயக்கத்தின் தலைவரும், நவீல்ட் பாடசாலையின் துணை அதிபருமான திரு கே. கோபாலகிருஷ்ணன் கைதடி [illegible] நடைபெற்ற அறவழி பாலர் கழகத்தின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்

பாலர் பாடசாலை அபிவிருத்திச்சபைத் தலைவி திருமதி மே. இராணி தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில், கைதடி - நுணாவில் வித்தியாலயத் துணை அதிபர் திரு எஸ். நடேசபிள்ளை சிறப்பு விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றுகையில் கள்ளிநகரில் இவ் வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்ட பாலர் முன்னேற்றப் பாடசாலை மூலம் இப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சிந்தனை மாற்றத்தில் இக் கிராமம் எழுச்சி கொண்டதாகக் கூறினார்.

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆயிரம் ரூபா அபராதம்

வல்வெட்டித்துறை, புதன் வல்வெட்டி தமிழீழ கிராம நீதி மன்றில் மது போதையில் பிரவேசித்து, வழக்கிற்கு சமூகந்தந்த ஒருவரை, விசாரணையாளர்கள் எச்சரித்த பொழுது, அவர்களுடன் தர்க்கம் புரிந்த நபர் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டு குறைந்த பட்ச குற்றமாக ஆயிரம் ரூபா செலுத்தும் படி பணிக்கப்பட்டார்

விசாரணைக் குழு முக்கியஸ்தர் ஒருவரை அகௌரவமாகப் பேசியமைக்காக இன்னுமொரு நபர் 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

விக்டரின் தூபியை

பண்டிதரின் தாயார் திறந்துவைத்தார்

பருத்தித்துறை புதன் பருத்தித்துறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்க மன்னார் பிராந்திய பொறுப்பாளர் தளகதிவிக்டரின் நினைவுத்தூபியை கப்டன் பண்டிதரின் தாயார் திருமதி சி மகேஸ்வரி அம்மையார் திறந்துவைத்தார். பருத்தித்துறை புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்திவிற்பனவுக்கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் திரு. என் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் விக்டரின் நினைவுத்தூபிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யாழ். மாவட்ட தளபதி திரு கிட்டு, வடமராட்சிப்பொறுப்பாளர் திரு. சூசை பருத்தித்துறைப் பொறுப்பாளர் திரு. நாதன், விக்டர் தூபிக்கான அடிக்கல்லை நாட்டி வைத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க பருத்தித்துறை இராணுவப் பொறுப்பாளர் திரு ரசீ. உட்பட பலர் மலர் மாலைகளைச்சூட்டி அஞ்சலி செய்தனர். பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பலர் உரைநிகழ்த்தினர்.

கடைசி நேர வரி விளம்பரம்

தவறிவிட்டது

வெலிங்டன் தியேட்டர் சந்திக்கும் பெருமான் கோவிலுக்கும் இடையில் பேஸ் அடையாள அட்டையுடனும் காசுடனும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் ச ரவிதாசன் 34, குமாரசாமி வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம். (C 6438)

லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
சுகாதகர் -ராதிகா
நடித்த
கிழக்கே போகும்
ரயில்
கலர் (புதிய பிரதி)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30- 4 30, 6-30

ஆண்டுகளை காதல் சேளிக்கைகளில் ஈடுபடுத்தி நினைத்ததை முடிப்பதில் அவள் வல்லவள். மயிர்கூச்செறியும் சண்டைகள் நிறைந்த
Samantha Fox
in
TOO HOT TO HANDLE
Action, Thrill, Sex
(Strictly Adults only)

சூட்டுக்கு வயோதிபர் காயம்

வல்வெட்டித்துறை, புதன் வல்வை இராணுவ முகாமின் முன்னாக மாடி வீட்டின் ஒரு பகுதியில் மண் மூடைக் அரண் அமைத்து கண்காணிப்பில் இருக்கும் இராணுவத்தினர் பாதையால் நடமாடும் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவருகின்றனர்.

மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தில் இன்று காலை வயோதிபர் ஒருவர் காலில் சூடுபட்டு பலத்த காயமடைந்தார் அப்புத்தரை (வயது 65 என்பவரே காயமடைந்தவராவார்.

தமிழ் மாகாண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவர் விகிதம் 86ம் ஆண்டில் 25 சதவீதமாக அதிகரித்துள்ள போதிலும் திருமலை மாவட்டத்தில் இப்போதும் சிங்களவர் அறுதிப் பெரும்பான்மையாக இல்லை என்பதையும் வலியுறுத்தவுள்ளதாக தெரியவருகிறது. திருமலையை தனிச் சிங்கள மாகாண மாக்குவதே இலங்கை அரசின் யோசனை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை திருமலை மாவட்டத்தில் அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்களை தெரிவு செய்த தொகுதிகளையும் உத்தேச கிழக்கின் தமிழ் மாகாண சபையுடன் இணைக்குமாறும் இவர்கள் வலியுறுத்துவார்கள் எனவும் தெரிய வருகிறது.

மாணவர்

(6 ம் பக்கத் தொடர்ச்சி

கைதடு மாதர் சங்கத் தலைவி திருமதி விசாலாட்சுமி இராமலிங்கம் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

ஆசிரியை செல்வி கே. கேதீஸ்வரி நன்றி கூறினார். (வா)

கொழும்பில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரளை வெடிக்கவைப்பதன் மூலமே இத்திட்டம் நிறைவேற்றப்படவிருந்ததாம்.

யோர்க் வீதியிலுள்ள இந்நிலையத்தில் இரு 'ஜேம்ஸ் பொண்ட்' கைகளில் வைக்கப்பட்டிருந்த இவ்விரு குண்டுகளும் நேற்றுக் காலை 9 15 மணிக்கு அல்லது 8-15மணிக்கு வெடிக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததாம் ஆயினும் அதிஷ்டவசமாக நிலையத்தில் அருகிலிருந்த நீதி அமைச்சுக் காவலாளி ஒருவர் இதனைக் கண்டுபொலிசில் அறிவித்ததையடுத்து ராணுவ வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் அவ்விடத்திற்கு விரைந்த குண்டுகளை செயலிழக்கச் செய்தனர்.

இவ்விரு பைகளிலும் மொத்தமாக ஆறு டெற்றனேற்றர்கள். ஒரு 9 வோல்ட் பற்றி வெடிமருந்து ஆகியவை இருக்கக்காணப்பட்டன. வெடிமருந்து புதுவகையானதென வெடிமருந்து நிபுணர்கள் தெரிவித்தனர்.

கோட்டையிலுள்ள புதிய இலங்கை வங்கிக் கட்டடம் தந்தி/தொலைத் தொடர்புத் திணைக்களம் ஆசிய அலுவலகங்களிற்கான மின்விநியோகத்தை இந்நிலையமே வழங்கி வருகிறது. (கூ-ஊ)

1987...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றிய தகவல்கள் எப்படி இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்தன என சிதம்பரம் குழுவினர் கேட்டபோது நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்ததாக இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

இதுசம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றி குழுவினர் கேட்டபோது பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு எதுவும் சொல்லப்படவில்லையாம்.

அத்துடன் இந்த நடவடிக்கைகளை இந்திய அரசு தடுக்க வேண்டுமெனவும் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதென தெரியவருகிறது. (கூ-ஊ)

தங்கவேலாயுதபுரத்தில்

இரு அமைப்புகள் மோதல்: படையினரும் சென்றனராம்

[மட்டக்களப்பு நிருபர்]

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் - தங்கவேலாயுதபுரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினருக்கும் இடையில் பலத்த மோதல் நேற்று டம்பெற்றதாகத் தெரிய வந்துள்ளது

இரு விடுதலை அமைப்புகளுக்குமிடையே இடம்பெற்ற மோதல் நேற்றுப் பிற்பகல் வரை நீடித்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து திருக்கோயில் முகாமிலிருந்து. அதிரடிப் படையினர் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று கொண்டிருப்பதாகவும், இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை மேற்கொண்டு எதுவித தகவலும் பெறமுடியாதிருப்பதாகவும் அந்தவட்டாரங்களிலிருந்து அறியக் கிடக்கிறது.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், ஈ பி. ஆர். எல் எவ். இயக்கத்தினருக்குமிடையே நடைபெற்று வந்த மோதல் முற்றாகத் தணிந்து விட்டதாகவும் தெரிய வருகிறது.

இங்கு நிலைமை எப்படி இருந்த போதிலும் இந்த மோதலில் ஈ பி ஆர். எல். எவ். அமைப்பில் உயிர்ச்சேதம் கணிசமான அளவு ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. (மா)

இனப்பிரச்னை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்ஸிறும் உடனிருந்தார் மாலை 5 30 மணிக்கு ஆரம்பித்த இச்சந்திப்பு சுமார் அரை மணி நேரம் நீடித்தது.

இச்சந்திப்புப் பற்றி அமைச்சர் தொண்டமான் 'ஈழநாடு'வுக்குத் தெரிவிக்கையில், "இப்பிரச்னைக்கு அவசரப்பட்டுத் தீர்வுகாண முடியாது நிதானமானமுறையில் அணுகித்தீர்த்தல் அவசியம்" என இணை அமைச்சர் தம்மிடம் தெரிவித்ததாகக் கூறினார்.

மேலும் தம்முடைய இந்த விஜயம் இறுதியானது என யாரும் நினைத்துவிடக்கூடாது என்றும், இப்பிரச்னைக்கு எப்படியும் சமாதானத் தீர்வு ஒன்றே காணப்படும் எனவும் தெரிவித்ததாகக் கூறினார்.

இன்றும் சந்திப்பார்

இந்தியக் குழுவினரைக் கௌரவித்து இராப்போசன விருந்தொன்றை இந்தியத் தூதுவர் இன்று அளிக்கவுள்ளார். இவ்விருந்து வைபவத்தின்போதும் தாம் இந்தியக் குழுவினருடன் பேச்சு நடத்தவுள்ளதாகத் திரு. தொண்டமான் மேலும் தெரிவித்தார். (ஊ)

குருநகரில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவசவாகனத்துடன் இராணுவத்தனர் சில நிமிடங்கள் நின்றுவிட்டு மீண்டும் முகாமுக்குள் திரும்பிவிட்டனராம்.

மண்டைதீவு முகாமிலிருந்தும் கடலமார்க்கமாகப் படகுகளில் இராணுவத்தினர் குருநகர்ப்பகுதியை நோக்கிவந்து கொண்டிருப்பதாகக்கிடைத்த தகவலைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் ஆயுதபாணிகளாக அவ்விடத்தில் எதிர்த்தாக்குதல் ஒன்றை நடாத்த தயாராக நின்றனர்.

அதேசமயம் அப்பகுதியில் குண்டுவெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் சில நிமிடங்கள் டம்பெற்ற போதிலும் பின்னர் அவை ஓய்ந்து அமைதி நிலவியது.

யாழ். நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகள் நேற்றிரவு பூராவும் பாதுகாப்பிலீடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

இலங்கையில் முதல் ஓடியோகிளப் ஆரம்பித்த ஒரு வருட நிறைவை முன்னிட்டு

இன்று ஆரம்பம்

நியூ விக்ரேஸ்
நத்தார், புதுவருட
மலிவு விற்பனை

★ சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்கள் (ரூபா 15/- முதல் 200/- வரை)

★ பாடல்கள் பதித்த ஓடியோ C 60 மக்சல் கசற் (ரூபா 29/50)

(புதிய சினிமாப் பாடல்கள் ஒலி 1 முதல் 90)
(பழைய " " " 1 " 69)
(பக்திப் பாடல்கள் " 1 " 53)
(கதை வசனங்கள் " 1 " 30)
நாதஸ்வரங்கள், கச்சேரிகள், நகைச்சுவைகள் இன்னும் பல

முடிவு:- 1-1-87

நியூ விக்ரேஸ்,
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 23532
(A-3258)

ஈராண்டு நினைவஞ்சலி

கதிரவேலு
சண் முகானந்தன்
(குப்பிளான்)
கூத்தப்பிரான் படைப்பு:
04-01-1954
கூலிப்படை அழிப்பு:
07-01-1985

கதிரவேலு
சுத்தானந்தன்
(சேகர்)
(குப்பிளான்)
பாரில் படைப்பு:
20-07-1963
பாதகர் அழிப்பு:
12-12-1984

சண்முகானந்தா! தலைஆண்பிள்ளாய்/... உன் தம்பியாம் சுத்தானந்தனை (சேகர்) உள்ளூர் உழுத்தர்களால் கண்டம்வேறு முண்டம் வேறாக கழுத்தையறுத்த காட்சியைக் கண்டுநீ கதிலங்கி மதிலங்கி பட்டப் பகலில் நித்திரை செய்கையில் கூலிப் பட்டாளம் சுட்டு விட்டனரோ! தமிழருக்கென்ன சாபக்கேடா? ஆண்டவன் விதியோ! ஆள்பவன் சதியோ! தம்மைத் தாமே கொல்பவர் மதியோ! எல்லாம் கடவுள், எமக்கு இது விதியோ! இன்னும் எத்தனை சித்திரவதையோ! எம் போன்றோர் பலரே பிள்ளைகளை இழந்து பேதலித்தழுகிறார்.

தாய், தந்தையர், சகோதரர்கள், உறவினர்.

[C 6437]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
18-12-86 வியாழக்கிழமை

"கிழக்கு மக்கள் வடமாகாணத்தவர்களுக்கு அடிமையாக வாழ விரும்பவில்லை"

— அமைச்சர் 'தேவா'

(கொழும்பு நிருபர்)

"கிழக்கு மாகாண மக்கள் வடமாகாண மக்களுக்கு அடிமையாக வாழ்வதை விரும்பவில்லை இதனாலேயே கிழக்கு மாகாணம் பிரிக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை"

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ தேவநாயம் நேற்று கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

கிழக்கு மாகாண எம்பீக்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் கூட்டப்பட்ட மேற்படி மாநாட்டிற்கு இந்து சமய கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரையும், கல்முனை எம். பி. ஜனாப் மகசூரும் கலந்து கொள்ளவில்லை

மேலும் அவர் பேசுகையில்: தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்னர் கேட்ட மாகாணசபை யோசனைகளை விட கூடுதலான அளவு அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள் 75 வீதமான கோரிக்கைகளை அரசு வழங்க முன் வந்துள்ளது. ஆனால் நடை முறைக்கு சாத்தியமில்லாதவற்றையே கூட்டணியினர் கோருகிறார்கள் என்றார்.

இதேவேளை நிருபர் ஒருவரின் "கிழக்கு மாகாண மக்களைத் தொடர்ந்தும் நீங்கள் பிரதிநிதித்துவம் படுத்துகிறீர்களா?" என்ற கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் "அதைப் பொதுத் தேர்தல் ஒன்றின் மூலமே அறிய வேண்டும்" என்றார்.

மேலும் தமிழர் பாரம்பரிய பிரதேசமாக வடக்கு கிழக்கை ஏற்க முடியாது என்று கூறிய அமைச்சர் ருகுணு என்னும் இடத்தில் ஆரம்பகாலம் தொட்டுத் தமிழர்கள் வாழவில்லை என்றார்.

சமாதானம் நிலவும் பொருட்டு வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்கக் கூடாதா என்ற கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் கிழக்கு மாகாண மக்கள் ஒருபோதும் அடிபணியமாட்டார்கள்' என்றார். [எ-கூ]

களுவாஞ்சிக்குடி சம்பவம்:
பஸ் சாரதியும் பலி

(மட்டக்களப்பு நிருபர்)

களுவாஞ்சிக்குடியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவமொன்றில் காயமடைந்து மட்டுநகர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த பஸ் சாரதி இராசதுரை (42வயது. பாண்டிருப்பு நேற்று மரணமானார்.

வவனியாவிலிருந்து மட்டக்களப்பிற்கு சென்ற பஸ் மீது களுவாஞ்சிக்குடியில் வைத்து அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தின் போது பஸ் கண்டக்டர் உட்பட இருவர் இறந்தது தெரிந்ததே. ( )

"தமிழ்நாடு முதலமைச்சர் சட்டப்பேரவைக்கு தெரிவானது சட்டப்படி செல்லுபடியானது"
உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, டிச 17

தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு 1984ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆந்திப்பட்டித் தொகுதியிலிருந்து போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டது சட்டப்படி செல்லுபடியானதாகும் என்று சென்னை உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

நியூயோர்க்கிலுள்ள இந்தியத் தூதுவர் முன்னிலையில் திரு எம்.ஜி இராமச்சந்திரன் எடுத்துக் கொண்ட உறுதி மொழி சட்ட விதிகளைப் பூர்த்தி செய்வதாக உள்ளது என்றும் ஆகவே அவரது உறுதிமொழி செல்லுபடியானதாகும் என்றும் நீதிபதி திரு எஸ்.மோகன் தீர்ப்பளித்தார்.

இது சம்பந்தமான மேற்படி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த திரு வல்லரசு என்பவரும் ஆந்திப்பட்டித் தொகுதி வாக்காளர் திரு. பழனியாண்டி என்பவரும் தாக்கல் செய்திருந்த இரு வழக்குகளையும் நீதிபதி நிராகரித்தார் [எ]

வழக்குத் தாக்கல் செய்ய ஏற்பாடு

ஊர்காவற்றுறை, புதன்

கடன் பெற்று மீளக் கட்டாதவர்களுக்கும் மேலதிகப்பற்று செலுத்தாதோருக்கும் ஊர்காவற்றுறை மக்கள் வங்கி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கேற்ற ஆயத்தங்களை செய்து காண்டிருக்கிறது. (சி)

சிதம்பரம் முஸ்லீம் குழு சந்திப்பு

(கொழும்பு)

இணையமைச்சர் நட்வர்சிங் தொண்டமானைச் சந்தித்த வேளையில் மத்திய உள்துறை இணையமைச்சர் திரு பி சிதம்பரம் முஸ்லீம் தூதுக்குழுவொன்றைச் சந்தித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ஊ]

வைத்திய நிலையம்

அராலி, புதன்.

அராலிவடக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் தலைவர் திரு நா. குகராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வாரத்தில் மூன்று நாட்கள் நடாத்திவந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை சில நிறுவனங்களின் உதவியோடு தினமும் நிரந்தர வைத்திய நிலையமாக நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

'ஷெல்' தாக்குதல்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை இராணுவமுகாமிலிருந்து நேற்றிரவு ஏவப்பட்ட இரு 'ஷெல்'கள் மாவிட்டபுரம் கீரிமலை வீதிக் கருகிலுள்ள வெளியொன்றில் விழுந்து வெடித்தன

நீண்டகால இடைவெளிக்குப் பின் நடத்தப்பட்ட இந்த 'ஷெல்' தாக்குதலால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

இத்தாக்குதலினால் சேதமெதுவும் ஏற்படவில்லை. [ஓ]

கோரிக்கை

பண்டத்தரிப்பு, புதன்,

எமது பிராந்தியத்தின் பனம் பொருள் அபிவிருத்திக்கு தமது பதவிக்காலத்தில் ஆர்வமுடன் சேவையாற்றிவந்த யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு ச. வேல யுதபிள்ளையின் இடமாற்றத்தை ரத்துசெய்து அவரைதொடர்ந்தும் யாழ் மாவட்டத்தில் கடமையாற்ற அனுமதிக்கும்மாறு பண்டத்தரிப்பு பரிஷ் தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கைவிடுத்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19 6-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number 3/1003/81 Eelanadu P.O. Box 49 Telegrame Eelanadu Telephone: 22389—24126

அகாலமரணமடைந்த புலிகள் இயக்கஉறுப்பினருக்கு துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், வியா.

தமிழீழவிடுதலைப் புலிகளின் குருநகர்ப் பிரதேசப் பொறுப்பாளர் யோ. அன்ரன் தேவராஜா [தேவதாஸ், ஜோசப்) உதவியாளர் நாகரத்தினம் நவரத்தினராஜா ஆகியோர் அகாலமரணமடைந்ததையிட்டுக் குருநகர், கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகள் எங்கும் அனுதாபம் தெரிவித்து நேற்றுப் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

தேவதாசின் சடலம் அவரது இல்லத்திலிருந்து நேற்றுக்காலை ஊர்வலமாக சென், பற்றிக்ஸ் பெரிய கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நடைபெற்ற பிரார்த்தனையின்பின் சென் மேரிஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அணிவகுப்பு மரியாதையுடனும் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த தேவதாஸிற்கு அஞ்சலி தெரிவித்து இருபதிற்கு மேற்பட்ட பொதுஸ்தாபனங்கள் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாகரத்தினம் நவரத்தினராஜ வின் சடலம் நேற்று யாழ் சர்வோதய அலுவலகத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஊர்வலமாகத் தூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் குருநகரில் உள்ள வீட்டில் தவறுதலாகக் கிரனேற் வெடித்ததால் இருவரும் மரணமடைந்ததும் ஒரு பெண் காயமடைந்ததும் தெரிந்ததே. [ஓ]

முல்லைத்தீவில் ஈ.பி.ஆர்.எல்,எவ். உறுப்பினர்கள் புலிகளிடம் சரண்

ஒட்டுசுட்டான், புதன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஈ பி. ஆர். எல் எவ் போராளிகளில் பெரும்பான்மையானவர்கள் புலிகளிடம் சரணடைந்தும், கைதுசெய்யப்பட்டுமுள்ளார்கள். ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் உடைமைகள் அநேகம் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சிலர் காடுகளுக்குள் ஓடி மறைந்துவிட்டார்களெனத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் வாகனங்களில் எங்கும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுவருகின்றனர்.

வடமராட்சியில்

வடமராட்சிப் பகுதியில் இருந்து தலைமறைவாகியுள்ள ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகளின் நெல்லியடி முகாமில் வந்து சரணடையுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சிப்பொறுப்பாளர் திரு. சூசை கேட்டுள்ளார். [வல் நி]

பூநகரியில்

மன்னார் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளால் பூநகரிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது தலைமறைவாகியிருந்த ஈ பி ஆர் எல் எவ் இயக்கத்தினர் சிலர் கைதுசெய்யப்பட்டனர். சிலர் சரணடைந்தனர். [பூ நி]

புதுவித படகுகள்

சுன்னாகம், புதன்

வடகடலில் புதுவித வடிவிலான கடற்படை ரோந்துப் படகுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மரண அறிவித்தல்

கந்தசாமி சுப்பிரமணியம்

இணுவில் நாதஸ்வரவித்துவான் கந்தசாமி சுப்பிரமணியம் நேற்று 17ம் திகதி காலை காலமானார் இவர் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்புக் கணவரும், திருமதி இராஜேஸ்வரி சின்னராசா வின் அருமைத் தந்தையும், பிரபல மிருதங்க வித்துவான் கே. சண்முகம் பிள்ளை (கொழும்பு) பிரபல தவில்மேதை நாச்சிமார் கோவிலடி எம். கே. கணேசபிள்ளை ஆகியோரின் இனிய சகோதரரும், நாதஸ்வரவித்துவான் இணுவில் என் ஆர். கோவிந்தசாமி, பிரபலதவில்மேதை இணுவில் என். ஆர். சின்னராசா நாதஸ்வர வித்துவான் இணுவில் என் ஆர். சந்தானகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் மரணச்சடங்கு 17-12-86 புதன்கிழமை மாலை தாவடியில் நடைபெற்றது.

தகவல்; என். ஆர் சின்னராசா.

(C 6436)

அரியகுட்டி சிவஞானம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு சிவஞானம் (மைலன் தியேட்டர் Operater) 15-12-86ல் கொழும்பில் காலமானார். இவர் ருக்குமணிதேவியின் அன்புக் கணவரும், தாரணி, தயாளன், தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அரியகுட்டி நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், நடராசா சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், நாகராசா (முன்னைநாள் C E O. முல்லைத்தீவு), தர்மலிங்கம் (தபாற்கந்தோர் யாழ்ப்பாணம்), திருமதி அன்னபூரணம் அரசரத்தினம், திருமதி கமலம் மகாலிங்கம் (ஆசிரியை கொடிகாமம்), திருமதி ஞானேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி லட்சுமிப்பிள்ளை நடராசா, திருமதி ராஜேஸ்வரி தியாகராசா, திருமதி இராசதுரை கமலாதேவி, செல்வி யோகராணி ஆகியோரின் மைத்துனருமாவார் ஈமக்கிரியைகள் இன்று (18-12 86) வியாழக்கிழமை காலை 10 00 மணியளவில் அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்] குடும்பத்தினர்

[C-6439]

மரண அறிவித்தல்

திரு. பொன்னம்பலம் துரைவீரசிங்கம்

சங்குவேலியைச் சேர்ந்த திரு.பொன்னம்பலம் துரைவீரசிங்கம் காலமானார் இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், டாக்டர் ஜெயவிக்கிரமராசா (பாரெயின்), ஜெயபாலா (லண்டன்), கமலாதேவி (யாழ். மாநகர சபை நூலகம், சுண்டிக்குளி), கிரிஜா, தனலஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருத்தணி [இந்தியா], ஜெயமாலாசக்தி [பாரெயின்] ஆகியோரின் மாமனாரும், நரேந்திரன், ஜெனார்த்தனன், சசிகலா ஆகியோரின் பேரனுமாவார். இவரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வியாழக்கிழமை (18-12-86) காலை 10.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சிவபாக்கியம் துரைவீரசிங்கம்.

(C 6440)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org